பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 14 சனிக்கிழமை 27.04.2024 கதிர் 171




இளகின இரும்பைக் கண்டால் கொல்லன்தூக்கித்தூக்கிஅடிப்பானாம் என்றொரு சொலவடை தமிழ்ப் புழக்கத்தில் உண்டு. ஒரு காலத்தில் வரலாற்றுக்கதாநாயகர்களாகஇருந்த ராஜபக்சக்களின்நிலைமைஇன்றைக்கு இதுதான். யார் வேண்டுமானாலும் அவர்களை விமர்சிக்கலாம், ஏ-துவேண்டுமானாலும்செய்யலாம் என்கிறநிலைமையாகிப்போய்விட்டது. அது பற்றிய செய்தி ஒன்றைத்தான் இன்றைக்கு உங்களுடன் பகிரப் போகின்றேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் மோசமாக பாதிக்கப்பட்ட வர்த்தகர் ஒருவர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, முன்னாள்பிரதமர்மஹிந்தராஜபக்ச, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் ஆகியோர் தனக்கு 50 மில்லியன் ரூபாய்இழப்பீடுதரவேண்டும்என்று கோரி கடிதம் அனுப்பியுள்ளார். நாட்டின்பொருளாதாரநெருக்கடியை தவறாக கையாண்டதற்காக இந்த இழப்பீட்டை அவர்கள் தனக்குத் தரவேண்டும் என்று அவர் ☞2

## அரசியல் தலையீடுகளைக் கண்டித்து மே தினத்தன்று குடாநாட்டில் ஆசிரியர் சங்கம் போராட்டம்

### அதன் செயலாளர் அறிவிப்பு



ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினத்தன்று யாழ்ப்பாணத்தில் பெரும் போராட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும்அரசியல் தலையீடுகளைக் கண்டித்து ☞2

## சஹ்ரானை ஆளாக்கியவர் ராணுவத்தின் சுரேஸ் சாலே

### நாடாளுமன்ற உறுப்பினர் பொன்சேகா உறுதி

உயிர்த்த ஞாயிறு ஞாயிறு தற்கொலைக் குண்டுதாரியான சஹ்ரான் ஹாசிமை, தற்போதைய அரசபுலனாய்வுசேவையின் (SIS) தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) சுரேஷ் சாலேவே ஆளாக்கினார் என்று நாடாளுமன்ற உறுப்பினர்சரத்பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இப்போது சாலே இந்த விவகாரத்தைக் கைகழுவ முயற்சித்தாலும்,அதிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது எனவும் அவர் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்றஉயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பானமூன்றாம்நாள் விவாதத்தில்உரையாற்றிய அவர் தெரிவித்தாவது:

நான் பதவியில் இருந்த போது அரச புலனாய்வு சேவையில் இருந்து சுரேஷ் சாலேவைநீக்கியிருந்தேன். எனினும், கோட்டபாய ராஜபக்சஜனாதிபதிபதவிக்கு வந்ததும் அரச புலனாய்வுச்சேவையின்தலைவராக சுரேஸ் சாலே நியமிக்கப்பட்டார்.

பின்னர், சாலேயின் வலது கரமாக இருந்த பொனிபஸ்பெரேரா கிழக்கு தளபதியாகநியமிக்கப்பட்டார். இவர்களே சஹ்ரானுடன் தொடர்பு கொண்டு அவரை ஹீரோவாக்கினார்கள்.

தாக்குதல்கள் இடம்பெற்ற போது தாம் நாட்டில் இருக்கவில்லை என சாலே அண்மையில் கூறி இருந்தார். தற்போது இருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியில், நாட்டில்தான் இல்லை அதனால் தனக்கும் தாக்குதலுக்கும் ☞8

## விவசாயத்துறை அபிவிருத்தி தொடர்பில் அமெ. துணைச் செயலர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக்கான துணைச்செயலாளரான அலெக்சிஸ் டெய்லர், அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் ஆகியோர் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அதிகரித்த உணவுப் பாதுகாப்பை ஊக்குவித்தல் மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய சவால்களுக்கு எதிரான மீண்டெழும்தன்மையினைஅதிகரித்தல் ஆகியவற்றை மேற்கொண்டு இலங்கையின் விவசாய அபிவிருத்தி ☞2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இந்தியப் பிரமர் மோடியின் பாதுகாப்பு ஆலோசகர்

# அரசு விசாரித்ததா?

## நாடாளுமன்றில் விமல் வீரவன்ஸ கொந்தளிப்பு

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இந்திய பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் செயற்பட்டுள்ளார் என்ற சர்ச்சைக்குரிய கருத்தின் உண்மை தன்மை என்ன? இவ்விடயம் தொடர்பில் ஆளும் தரப்பு விசாரணை ☞2

## கூட்டு பாலியல் வன்புணர்வு வழக்கில் சகோதரன் கைது

யாழ்ப்பாணத்தில் பெண் ஒருவருக்கு போதைப் பொருள் கொடுத்து கும்பல் ஒன்று கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்தது என்றுகூறப்படும்சம்பவம் தொடர்பாகப் பெண்ணின் சகோதரன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டார.

அவரேபெண்ணுக்கு பலாத்காரமாக போதைப் பொருள்வழங்கியாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வந்தார்என்றுபொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

யாழ். நகரை அண்டிய பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணொருவரே பாதிக்கப்பட்டுள்ளார். அவரது பெற்றோர் உயிரிழந்த நிலையில், சகோதரியுடன்வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் வசித்து வந்துள்ளார்.

கந்தடிசெம்பர்மாதம் பெண்ணின்சகோதரியும் உயிரிழந்துள்ளார்.அதன் பின்னரும் இல்லத்திலேயே வசித்து வந்த பெண்ணை ☞2

## எல்லை தாண்டி 3 இந்தியர்கள் மேன்முறையீட்டில் விடுதலை

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனைவிதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் மூவருக்கானதண்டனை நேற்று ரத்துச் செய்யப்பட்டு அவர்களைஏப்ரல் 30ஆம்திகதி விடுதலை செய்யுமாறு யாழ். மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கடற்பரப்பிற்குள்பெப்ரவரி 12, 22 ஆம் திகதிகளில் கைது செய்யப்பட்ட மீன்பிடிப் படகுகளின் ஓட்டிகளே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன்கைதுசெய்யப்பட்ட ஏனையவர்கள் உடனடியாகவே விடுதலை செய்யப்பட்டபோதும்படகுகளின் ஓட்டிகள்என்றுமுறையில் இவர்கள் மூவருக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் 6 ☞2

## மற்றொரு சந்தேகநபரும் நேற்றுக் கைது

வட்டுக்கோட்டையில் பவித்திரன்என்றஇளைஞன்கடத்திச்சித்திரவதைக்கு உள்ளாக்கிபடுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில்தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மார்ச் மாதம் 11ஆம் திகதி ☞2

## மனோவின் கோரிக்கை

பிரிக்ஸ் அமைப்பில் இலங்கைஇணைவதற்கு சீனா உதவ வேண்டும் எனநாடாளுமன்றஉறுப்பினரும்,தமிழ்முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் (CPC) மத்திய குழுவின் துணை அமைச்சர் சன்ஹையனுடன்இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ☞8

## சர்வதேச ஒத்துழைப்புடன் கூடிய விசாரணைப் பொறிமுறை தேவை

### ஜி.எல்.பீரிஸ் எம்.பி. வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான உண்மையை கண்டறிய வேண்டுமாயின் சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். விசேட பொறிமுறை ஊடான விசாரணைகள்-மூலமே உண்மையைகண்டறிய முடியும் என ☞8

## ஓ.எல். மீளாய்வு பெறுபேறுகள் அடுத்த வாரம்

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மீள்பரிசீலனைமுடிவுகள் இரு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியலாக்குவதை தவிர்க்குக

### கர்தினாலுக்கு மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி. அழுத்தம்
### சஜித், அனுரவுடன் மட்டுமா 'டீல்' என்றும் கேள்வி

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்குவதை பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித்தும்கத்தோலிக்க திருச்சபையும் தவிர்க்கவேண்டும்.பேராயருக்கு சஜித் பிரேமதாஸ, அநுரகுமாரதிஸாநாயக்க ஆகியோருடன்மட்டுமா 'டீல்' உள்ளது.

இவ்வாறு கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

தெரிவித்துள்ளார்.

வட்டியுடன் கூடிய பணத்தை இரண்டுவாரங்களுக்குள்செலுத்தாவிட்டால் இவர்கள் மூவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்அந்தவர்த்தகரின்கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஒருமுறை தூக்கி எறியக்கூடிய சத்திரசிகிச்சைபொருட்களைஉற்பத்தி செய்யும்தொழிலதிபர்கலிங்கசில்வா என்பவரே தனது சட்டத்தரணி பிரமோத் பொல்பிட்டிய ஊடாக இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

2019 மற்றும் 2022 க்கு இடையில் பொருளாதாரம் தவறாகக் கையாளப்பட்டதன் காரணமாக, தனது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போனதாகவும், இதன் விளைவாக ரூ. 50மில்லியன்அமெரிக்கடொலர் பெறுமதியா இழப்புத் தனக்கு ஏற்பட்டதாகவும்அவர்தெரிவித்துள்ளார். இறக்குமதிப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், தினசரி மின்வெட்டு என்பன தனது வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட நட்டத்திற்குப் பிரதான காரணங்களாகும் எனவும், இதற்கு மேற்கூறியநபர்களேபொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கோட்டாபய, மகிந்த, பஸில் ராஜபக்ச, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் நாணயச் சபை உள்ளிட்ட பிரதிவாதிகள் உட்பட பலரே பொருளாதார நலிவுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் என்று ஏற்கனவே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், அவர்களேதனக்கு இழப்பீட்டையும் தரவேண்டும்என்கிறவாதத்தையும் வர்த்தகர் முன்வைத்துள்ளார்.

செய்த வினையெல்லாம் ஒருநாள் ஒன்றாக எழுந்து வந்து கழுத்தறுக்கும் என்பது இதைத்தானோ....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியதா? இந்தத் தாக்குதலால் இலங்கை தேர்தலில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை,இந்திய தேர்தலிலேயேபெரும்மாற்றங்கள் ஏற்பட்டன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரசன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (26) இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்பின்னணியின்உண்மை இதுவரை கண்டுப் பிடிக்கப் படவில்லை. இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்திலும் இடம்பெறாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் வழங்கப் படவில்லை.

குண்டுத் தாக்குதல் தொடர்பான விவாதம் இடம்பெறும்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், 'நல்லாட்சி'யின் பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க சபைக்கு வருகை தராமல் இருப்பது கவலைக்குரியது.

இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியார் என்று அனைவரும் கேட்கிறார்கள். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதான சூத்திரதாரியை தான் அறிந்தேன் குறிப்பிட்டுக் கொண்டு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கும், நீதிமன்றத்துக்கும் இரகசிய வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி தொடர்பில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் யுடியூப்வலைத்தளத்தில் நேர்காணல் ஒன்று வழங்கியுள்ளார். இந்த தாக்குதலின் பின்னணியில் இந்தியப் பிரதமரின் பாதுகாப்புஆலோசகரானஅஜித்தோவால் உள்ளார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே இதன் உண்மை என்னவென்பதைஆராயவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட மறுநாளன்று அதாவது 2019.04.22 ஆம் திகதி இந்தியாவில் கோவா பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் வாழும் கத்தோலிக்கர்களுக்கு ஏற்பட்ட நிலையை இந்தியாவில் உள்ள கத்தோலிக்கர்களுக்கு நேரிட இடமளிக்க போவதில்லை என்று உத்வேகத்துடன் தெரிவித்தார். அக்காலப்பகுதியில் அவரது பரப்புரைகள் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை முன்னிலைப்படுத்தியதாகவே காணப்பட்டது.இதனால்இந்தியாவில் வாழும் கத்தோலிக்கர்களும் அவருக்கு வாக்களித்தார்கள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில்பெறுமளவில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. கத்தோலிக்கர்கள் செறிவாக வாழும் பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவே வெற்றி பெற்றார். தேர்தலில் வெற்றிப்பெற்ற கோட்டபய ராஜபக்சவுக்கு கத்தோலிக்கர்களின் வாக்குகள் பெருமளவில் கிடைக்கப் பெறவில்லை. ஆகவே உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்இந்தியத் தேர்தலில் தான் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் கத்தோலிக்கர்கள் பாதிக்கப்படுவதற்குமுன்னர்சுதேசிய முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டார்கள். பயங்கரவாதி சஹ்ரான் சுதேசிய முஸ்லிம்களின் பாரம்பரிய மத நம்பிக்கைக்குஎதிராகச்செயற்பட்டார். 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் சுதேசிய முஸ்லிம்களின் 117 குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன. காத்தான்குடியில் பயங்கரவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில் சுதேசிய முஸ்லிம்கள் அப்போதைய ஆளும் தரப்பிடமும் பாதுகாப்புதரப்பினிடமும்முறைப்பாடளித்தார்கள். ஆனால்ஆளும்தரப்பு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் சுதேசிய முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டார்கள்.அதனைஆளும் தரப்பு அலட்சியப்படுத்தியது. இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகள் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலாக உச்சமடைந்தது. ஆகவேசமூகக்கட்டமைப்பில்மறைந்துள்ள அடிப்படைவாதம் தொடர்பில் தற்போதைய ஆளும் தரப்பு என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்றார்.

## ஓ.எல். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காமினி வலேபொட எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய ஒரு லட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள் பரீட்சை பெறுபேறுகள் மீதான மீள்பரிசீலனை முடிவுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். க.பொ.த. உயர்தரத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில்அந்தமாணவர்கள்இதன் மூலம் பெரும் அசௌரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த விடயத்தில் கல்வி அமைச்சர் உரிய கவனம் செலுத்தி மீள்பரிசீலனை முடிவுகளை விரைவாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் வலேபொட.

இதற்குப்பதிலளித்தநீதியமைச்சர் தெரிவித்ததாவது:

வழமையாக உள்ளதைவிட இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை விடைத்தாள் மீள்பரிசீலனைக்காக இரண்டு மடங்கு பரீட்சை விடைத்தாள் தொகைகிடைத்துள்ளன. அதற்கான நடவடிக்கைகள் நிறைவு பெறும் நிலையில் உள்ளது. அடுத்த மாத முற்பகுதியில் அதனை வெளியிட முடியும்.

எவ்வாறாயினும் இம்முறை கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சைஎதிர்வரும்மேமாதம்இரண்டாவது வாரத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு முன்பதாக இந்த மீள்பரிசீலனை முடிவுகள் வெளியிடப்படும். அது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் எனக்கு அறிவித்துள்ளார் - என்றார்.

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது சகோதரன் தன்னுடன் அழைத்துச்சென்றுள்ளார். பின்னர், கடந்த வாரம் அந்தப் பெண்ணை மீண்டும் அதே ஆதரவற்றோர் இல்லத்தில் கொண்டு சென்று சேர்த்துள்ளார்.

இல்லத்திற்குத் திரும்பி பெண்ணின் நடவடிக்கையில் மாற்றங்கள் தென்பட்டதுடன், உடலில் காயங்கள் காணப்பட்டமையால், இல்ல நிர்வாகத்தினர் அவரைப் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில்சிகிச்சைக்காகசேர்த்தனர். வைத்தியசிகிச்சையின்போதேபெண் தனக்கு நேர்ந்த கொடுமைகளை விவரித்துள்ளார்.

இதனை அடுத்து சட்ட வைத்திய அதிகாரியினால், முன்னெடுக்கப்பட்ட மருத்துவபரிசோதனைகளின்போது, பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையும், அடித்துத்துன்புறுத்திசித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை பொலிஸார், குற்றம் நடைபெற்ற பிரதேசம் யாழ்ப்பாண தலைமைபொலிஸ்நிலையபிரிவுக்கு உட்பட்டதுஎன்றதன்அடிப்படையில், யாழ்ப்பாண பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், பெண்ணின் சகோதரன் மீது பெண்ணைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை, போதைப்பொருட்களை கட்டாயப் படுத்தி நுகரக் கொடுத்து பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களைப் பொலிஸார் சுமத்தியுள்ளனர்.

சகோதரனை கைது செய்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் யாழ், நீதிவான் நீதிமன்றில் வியாழக்கிழமை முற்படுத்தியவேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

## எல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதச்சிறைத்தண்டனைவிதித்தது.

இந்தத் தண்டனையை எதிர்த்து மீனவர்கள் சார்பில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது. நீதிபதி டி.எவ்.சூசைதாசன் முன்பாக நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மூன்றுபேரின்சிறைத்தண்டனையும் புறமொதுக்கி மூவரையும் ஏப்ரல் 30 ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தி விடுவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகிந்தானந்த அளுத்கமகே.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பல விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்காக மாத்திரம் 150 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பேராயருடன் சேர்ந்து கத்தோலிக்கத் திருச் சபையும் மக்கள் மத்தியில் மாறுப்பட்ட நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறது. கத்தோலிக்கர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக அவர்கள் குரல் கொடுக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இருப்பினும்இந்ததாக்குதல்நாட்டில் இடம்பெற்ற முதலாவது தாக்குதல் அல்ல, தலதா மாளிகை, ஸ்ரீ மாவிகாரை, காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல் என மத தலங்கள் மீது அடிப்படைவாதிகளாலும் பயங்கரவாதிகளாலும் இதற்கு முன்னரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தலதா மாளிகை தாக்குதல், அரந்தலாவ பிக்குகள் படுகொலை சம்பவங்களைசிங்களபௌத்தர்கள் இழுத்துக்கொண்டுசெல்லவில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்தாரிகளையும், தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்களையும் கத்தோலிக்க சபை குற்றஞ்சாட்டுவதில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவை மாத்திரமே விமர்சிக்கிறார்கள். குற்றஞ்சாட்டுகிறார்கள்.

கத்தோலிக்க மக்களுக்கு இந்த நாட்டில் உள்ள கௌரவத்தை இல்லாதொழிக்க வேண்டாம் என பேராயரிடமும், கத்தோலிக்க சபையிடமும்கைக்கூப்பிவேண்டிக் கொள்கிறேன். சஜித்துக்கும், அநுரவுக்கும் வாக்களிக்குமாறு பேராயர் குறிப்பிடுகிறார். தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று இவரால் எவ்வாறு குறிப்பிட முடியும்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டபய ராஜபக்சவுக்கு சிங்கள பௌத்தர்கள் வாக்களித்தார்கள். ஆனால் அஸ்கிரிய பீடம் கோட்டபய ராஜபக்சவுக்கு வாக்களிக்குமாறு சிங்கள மக்களிடம் கேட்கவில்லை. மதத் தலைவர்கள் அரசியல் மேடைகளுக்குவருவதில்லை. சஜித் பிரேமதாச, அநுரகுமாரதிஸாநாயக்க ஆகியோரிடம் மாத்திரமா பேராயர் 'டீல்' வைத்துள்ளார்.

ஜேவிபிக்கு வாக்களிக்குமாறு பேராயர் குறிப்பிடுகிறார். ஆனால் குண்டுத் தாக்குதல்தாரிகளின் தந்தை, ஜேவிபியின் தேசிய பட்டியல்உறுப்பினர். இந்தக்கட்சிக்கு வாக்களிக்குமாறு குறிப்பிடும் அளவுக்குப் பேராயர் ஏன் தள்ளப்பட்டுள்ளார் என்பதை அறியவில்லை. ஆகவே இவரது கருத்துக்கள் துரதிஷ்டவசமானவை.

தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் நாங்கள் ஒருபோதும் சிங்களவர்களுக்கு மாத்திரம் வாக்களிக்குமாறு குறிப்பிடவில்லை. ஆகவே உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களை அரசியலுக்காக பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம் என்பதை கத்தோலிக்க சபையிடம் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## அமெ. துணைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிசெய்வதில்அமெரிக்கமக்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை துணைச் செயலாளர் டெய்லரின் இந்தப் பயணம் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழலுக்குஉகந்தநடைமுறைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட சந்தை இணைப்புகள் ஊடாக உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலையுடன் தொடர்புடைய சவால்களுக்குஎதிரானமீண்டெழும் தன்மையினை மேம்படுத்துதல் ஆகியவிடயங்களில் கவனம் செலுத்தும் 2024 பூட் போர் புராகிறஸ் (Food for Progress) எனும் முன்முயற்சியில்ஒரு முன்னுரிமை நாடாக இலங்கை வகிக்கும் முக்கிய பங்கினை வெள்ளிக்கிழமை துணைச்செயலாளர் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் உறுதிப்படுத்தின என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் 15,000 இற்கும் மேற்பட்ட பாற்பண்ணையாளர்களுக்கு அவர்களது பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்கு உதவிசெய்த27.5மில்லியன்டொலர் பெறுமதியுடைய சந்தை சார்ந்த பால்பண்ணை (Market-Oriented Dairy) எனும்செயற்திட்டம்தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

தேவையற்ற எரிசக்தி நுகர்வினைக் குறைக்கும் விதத்திலான கால்நடை வளர்ப்பு மற்றும் தீவன நுகர்வுஉத்திகள்தொடர்பாகவிரிவான பயிற்சியினை வழங்குவதன் மூலம் பாற்பண்ணையாளர்கள் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடைவதை மேம்படுத்துவது இந்தப் பாற்பண்ணை செயற்திட்டத்தின் இலக்காகும்.

ஸ்திரத்தன்மை மற்றும் சௌபாக்கியம் ஆகியவற்றைப் பேணிவளர்ப்பதற்கான எமது பரந்த இலக்கின் ஒரு பகுதியாக அமெரிக்க உதவிகள் ஊடாக இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது என்று அதன் தூதரகம் தெரிவித்துள்ளது.

விவசாய பங்காண்மைகளில் முதலீடுசெய்வதன்மூலம், உள்ளூர் விவசாயிகளை வலுவூட்டுவதற்கும், உணவுஉற்பத்தியைஅதிகரிப்பதற்கும் மற்றும் அனைவருக்கும் மிகவும் பாதுகாப்பான ஒரு எதிர்காலத்தை உறுதிசெய்வதற்கும் தாம் எதிர்பார்த்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளது.

## மே தினத்தன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தை நடத்த உத்தேசித்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார். தமது போராட்டம் வெற்றி பெற அனைவரின் ஒத்துழைப்பையும் அவர் கோரி நின்றார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குகிழக்கு மாகாணங்களில் உள்ள தேசிய பாடசாலைகளின் அதிபர் நியமனங்களில் அரசியல் தலையீடுகள்அதிகரித்திருக்கின்றன.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட அதிபரைப் பதவியேற்க விடாமல் வேறொரு அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுபோலவேகிழக்குமாகாணத்திலும் ஒரு பாடசாலையில் நடந்துள்ளது. இந்தவிடயத்தில் பிள்ளையான் தலையிட்டுள்ளார். சரியானமுறையில்அதிபர்நியமனம் இடம்பெற்ற போதும்கூட இந்த நியமனங்களை வடக்கு கிழக்கில் அரசியல்வாதிகளால்எவ்வாறுமாற்ற முடியும்? உடனடியாக இவற்றைச் சரிசெய்யும்படி நாங்கள் கல்வி அமைச்சிடம் கோரி இருந்தோம்.

தேர்தலில் சிலரின் ஆதரவைப் பெறுவதற்காகவே இவ்வாறெல்லாம் செய்கிறார்கள். நாங்கள் வலியுறுத்தி திருத்த சொல்லியும் கல்வியமைச்சு இந்த நியமனங்களைச்சரிசெய்யவில்லை. அது மட்டுமல்லாமல் ஆசிரியர் இடம்மாற்றங்களிலும் அரசியல்வாதிகள் தலையீடு செய்கிறார்கள். இதுதொடர்பாககிழக்குமாகாணத்தில் ஏற்கனவே 2 வழக்குகள் நடந்து வருகின்றன. 3ஆவது வழக்கு நடக்க இருக்கிறது.

இடமாற்றம், பதவியுயர்வு தொடர்பாகவடக்குகிழக்குமாகாணங்களில ஆசிரியர்களுக்கு எதிராக நடக்கும் செயற்பாடுகள் உடனடியாகநிறுத்தப்படவேண்டும். உரிமைமீறல்களும் நிறுத்தப்படவேண்டும்.

## மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரைநகர் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு ,வீடு திரும்பிக்கொண்டிருந்த பவித்திரனையும் அவரது மனைவியையும்காரில் கடத்திச் சென்றகும்பல், மனைவியை இறக்கி விட்டுவிட்டு கணவனைக் கொலை செய்தது. பொன்னாலை பாலத்திற்கு அருகில்உள்ளகடற்படைமுகாமிற்கு முன்பாகவைத்துவன்முறைகும்பல் கணவன், மனைவி இருவரையும் கடத்தி சென்றது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் இதுவரையில் 09 பேரை சந்தேகத்தில் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருக்கின்றனர். நீதிமன்றால் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களில் ஒருவர் காரைநகர் பகுதியில் தலைமறைவாக இருந்த நிலையில் நேற்றைய தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# வியாபாரத்துக்கான முதலீடாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் மாற்றப்பட்டமையே தீர்வுகளை எட்டமுடியாதிருக்க காரணம்

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் குதர்க்கம்




காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தற்போது ஒரு சிலரது சுயநலத்துக்காக சர்வதேசத்தை நோக்கிய வியாபாரமாக ஆக்கப்பட்டமையே உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் அவலங்களுடனும் ஏக்கத்துடன் இன்றும் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாக்கப்பட்டுவிட்டது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த சிறீரங்கேஸ்வரன் இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்ததுடன் அது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

எமது நாட்டைப்பொறுத்தளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயமென்பது பெரும் பேசுபொருளான ஒரு விடயமாக உள்ளது.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் பாதிக்கப்பட்ட உறவுகள் அதை நோக்கி சரியாக தமது கோரிக்கைகளை முன்னெடுத்திருந்த போதிலும் ஒரு சில சுயநல அரசியல் வாதிகள் தமது தேவைகளுக்காக அந்த உறவுகளின் உணர்வுகளை வியாபாரமாக்கி விட்டுள்ளதன் வெளிப்பாடே இதுவரை எந்தவொரு தீர்வையும் எட்ட முடியாதிருக்கின்றது.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சிறிதளவேனும் முன்னேற்றம் ஏற்படவில்லை என தெரிவித்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் 1983 ஆம் ஆண்டிலிருந்து 2009 வரையான காலப்பகுதிக்குள் காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு உண்மையாகவே பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து எத்தகைய ஆதரவு அல்லது ஒத்துழைப்புகள் கிடைத்திருக்கின்றன என்பதே இங்கு பார்க்கப்பட வேண்டிய முக்கிய விடயமாக உள்ளது.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நியாயம் கிடைக்கப்பெற வேண்டும் என்பதற்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினாகிய நாம் 1995 களில் அதாவது சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட காலப் பகுதியில், பல்வேறு அழுத்தங்கள் இருந்தபோதிலும் அவற்றை உடைத்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பாதுகாவலர் சங்கத்தை அமைத்து உறவுகளை மீட்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களது பெற்றோர்கள் இன்றும் தமது பிள்ளைகள் வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் போராட்டங்களையும் கோரிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். அது அவர்களது உணர்வுடன் கூடிய விடயம்.

ஆனால் அதை கொச்சைப்படுத்தும் வகையில் ஏற்பாட்டுக் குழு அல்லது சங்கம் என்று கூறி அவர்களது கட்டமைப்புக்குள் உள்நுழைந்த சுயநல அரசியல் குழுவினர் அவர்களது வலிகளையும் வேதனைகளையும் தமக்கான அரசியல் வியாபாரத்தின் முதலீடாக்கி வருமானம் ஈட்டும் ஒரு மையப்பொருளாக அந்தப் போராட்டத்தை திசைவழிமாறச் செய்துவிட்டனர்.

அந்தவகையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகளது உணர்வுகளுக்கு மதிப்பளித்து சுயநலன்களையும் அரசியல் இலாபங்களையும் குறித்த தரப்பினர் கைவிட்டு தீர்வுகளையும் பரிகாரத்தையும் தேடிகொள்ளும் வகையில் அந்த உறவுகளுக்கு ஒத்துழைப்பது அவசியம் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# 24 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியைக்கு கௌரவம்





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவைச் சேர்ந்த திருமதி ஜெயகோபன் நந்தினி தனது 60 ஆவது வயதில் இன்று ஓய்வு பெற்றார்.

அவர் இறுதியாக கற்பித்த நிந்தவூர் இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) பிரியாவிடை நிகழ்வு நடத்தப்பட்டது.

2000 ஆம் ஆண்டு தொடங்கிய அவரது ஆசிரியர் சேவை 2024 உடன் நிறைவு பெற்றது.

2000-2008 வரை விபுலானந்த மத்திய கல்லூரி காரைதீவு

2009- 2019 வரை அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயம் . இறுதியாக

2020- 2024 வரை இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலயத்தில் நேற்று வரை சேவையாற்றினார்.

நிகழ்வில் அவரது குடும்பம் கலந்துகொண்டது.

தன்னுடைய இந் நிகழ்வை மேலும் சிறப்பித்து பிரியாவிடை நிகழ்வை அளித்த சகோதர பாடசாலை இமாம் கஸ்ஸாலி மஹா வித்தியாலய அதிபர் ஆசிரிய மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் என்று அவர் நன்றிகள் தெரிவித்தார்.(05)

# தந்தை செல்வா நினைவு தினமான





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நேற்று (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் ஏற்பாட்டில் யாழிலுள்ள தந்தை செல்வநாயகம் நினைவுத் தூபியில் இந் நிகழ்வு நேற்;று காலை நடைபெற்றது.



தந்தை செல்வாவின் தூபிக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் 'இலங்கை தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான வாய்ப்புக்களும் சவால்களும்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையாற்றினார்.

இதன்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சியின் மூத்த பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்காலத்தை பாழாக்காதீர்கள்

வடக்குகிழக்குமாகாணங்களில்அதிபர்நியமனங்கள், ஆசிரியர் இடமாற்றங்கள் என்பவற்றில் அரசியல் தலையீடுகள் அதிகரித்திருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கம் இந்தக் குற்றச்சாட்டை எழுப்பியுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் நியமனத்தையும் கிழக்கில் பட்டிருப்பு கல்லூரியின் அதிபர் நியமனத்தையும் சுட்டிக்காட்டியுள்ள சங்கம் இந்த அரசியல் தலையீட்டை எதிர்த்து மே தினத்தன்று போராட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது.

ஏற்கனவே நலிவடைந்து நாட்டின் கடைநிலையில் இருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வித்துறையில் இத்தகைய அரசியல் தலையீடுகள் தொடர்பான தகவல்கள் அபாய எச்சரிக்கைகளாகவே தெரிகின்றன.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், குறிப்பாக தேசிய பாடசாலைகளில்தான் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளனஎன்றுதெரிவித்தார். கொழும்புஆளும் தரப்பில் அமைச்சுப் பதவிகளை அல்லது இராஜாங்க அமைச்சுப்பதவியை வைத்திருப்பவர்களாலேயே இந்தத் தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உய்த்துணர்வது ஒன்றும் கடினமான காரியமல்ல. அதுமட்டுமல்ல யாழ். மத்திய கல்லூரி விடயத்தில் தனது தலையீடு இருக்கின்றது என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே கடந்த காலங்களில் ஏற்றுக்கொண்டும் இருக்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ள இந்த பாடசாலைகளின் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அரசியல் தலையீடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தாம்கல்விஅமைச்சிடம்கோரிக்கைவிடுத்திருக்கிறார்கள் என்றும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஆனால், அமைச்சரு அது தொடர்பில் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பதையும் தெரிவித்துள்ளார்.


கல்வி அமைச்சும் அது அரசியல் தளத்தின் பங்காளிகளாக இருக்கையில் அதனிடம் இருந்து நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது அபத்தமானது. ஆனால், கல்வித்துறையில் அரசியல் தலையீடு முற்றிலுமாக நிறுத்தப்படவேண்டும். அதிலும் ஆசிரியர் இடமாற்றங்களில் இடம்பெறும் தலையீடுகள் முற்றிலுமாகத் தடுக்கப்படவேண்டும்.

அரசியல் தலையீடுகள் மட்டுமன்றி, பாடசாலைகள் மூடப்படுவது தொடர்பான குற்றச்சாட்டையும் இலங்கை ஆசிரியர் சங்கம் சுமத்தியுள்ளது. இதுவும் பாரதூரமான விடயமே!பாடசாலைகளில்மாணவர்களின்எண்ணிக்கை குறைவுஎன்கிறகாரணத்தைமுன்வைத்துபாடசாலைகள் --மூடப்படுகின்றன. ஆனால் மதுச்சாலைகளை மேலும் மேலும் திறந்து வருகின்றது இந்த ஆட்சி.

எதை வளர்க்கவேண்டுமோ அதை அழித்தும் எதை அழிக்க வேண்டுமோ அதை வளர்த்தும் வரும் இந்த ஆட்சியின் போக்கு அழிவுப் பாதைக்கே வித்திடும். கல்வித்துறையில் அரசியல் தலையீடு என்பது எதிர்காலச் சந்ததியினரின் எதிர்காலத்தையே அழித்துவிடும் என்பதால் அது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். கல்வித்துறையின் செயற்பாடுகளில் தவறுகள் இருப்பின் அவை பற்றிய கொள்கை முடிவுகளை ஆராய்ந்து எடுத்து செயற்படுத்துவதே அரசியல்வாதிகளின் கடமை. அதைவிடுத்து தனிப்பட்ட நபர்களுக்காகவும் தமக்கு வேண்டியவர்களுக்காகவும் அரசியல் அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்வது அரசியலாளர்களுக்கு அழகல்ல. எனவே கல்வித்துறையில் தமது தலையீட்டை நிறுத்தி அரசியலாளர்கள் உடனடியாக ஒதுங்கிக்கொள்ளவேண்டும்.

# 50 வயதுக்கு மேல் எலும்புகள் பத்திரம்

கு.கணேசன்





ஐம்பது வயதைக் கடந்துவிட்டால் போதும் உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, கண் புரை, காது கேளாமை, நடையில் தள்ளாட்டம், மாரடைப்பு, மூட்டுவலி எனப் பல நோய்கள் வரிசைகட்டி வந்து நிற்கும்.

இப்போது புதிதாக 'ஆஸ்டியோபோரோசிஸ்' (Osteoporosis) என்று நவீன மருத்துவர்களால் அழைக்கப்படுகிற 'எலும்பு வலுவிழப்பு நோய்' இந்த வரிசையில் சேர்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக, மாதவிலக்கு நின்ற பெண்களுக்கு இந்த நோய் அதிக பாதிப்பைத் தருகிறது. உடலுழைப்பு குறைந்துபோனது, உடற்பயிற்சி இல்லாதது, மேற்கத்திய உணவுமுறைகளைப் பின்பற்றுவது போன்ற பல காரணங்களால் இந்த நோய் ஏற்படுவது இப்போது அதிகரித்துவருகிறது.

### 'எலும்பு வலுவிழப்பு நோய்' என்றால் என்ன?

நம் உடலுக்கு வடிவம் தருகிற எலும்புகள்தான் உடல்உறுப்புகளையும்தாங்கிப்பிடிக்கின்றன. நடப்பது, நிற்பது, குனிவது போன்ற உடல் இயக்கங்களுக்குத் தசைகளுடன் இணைந்து ஒத்துழைக்கின்றன. இதற்காக ஒவ்வொரு எலும்பும் குறிப்பிட்ட கால இடைவெளியில் தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது. எலும்பில் உள்ள பழைய செல்கள் அழிக்கப்பட்டு, புதிய செல்கள் உற்பத்தியாகின்றன. இளமையில் இந்தச் செயல்பாடு மிக வேகமாக நிகழும். வயதாக ஆக இது மெதுவாக நிகழும்.

### பங்களியுங்கள்

பொதுவாக 35 வயதுக்குப் பிறகே புதிய செல்கள் உருவாவது தாமதமாகும். பழைய செல்கள் அழிந்த இடங்களில் புதிய செல்கள் உருவாகாமலும் போகும். அப்போது எலும்பின் இயல்பான அடர்த்தி (Bone mass) குறையும். இதற்கு 'ஆஸ்டியோபீனியா' (Osteopenia) என்பது ஆங்கிலப் பெயர். தமிழில், 'எலும்புத் திண்மக் குறைவு நோய்'.

ஐம்பது வயதுக்கு மேல் எலும்பின் அடர்த்தி இன்னும் குறையும்போது அதில் சிறுசிறு துவாரங்கள் விழுந்து தன் வலிமையை இழக்கும். இதன் விளைவாக எளிதில் நிற்க முடியாமல், அதிக தூரம் நடக்க முடியாமல் போகும். நாளடைவில் அந்த எலும்பு முறிவு ஏற்பட அதிக வாய்ப்பு உண்டாகிறது. இதைத்தான் 'எலும்பு வலுவிழப்பு நோய்' என்கிறோம். இதற்கு 'எலும்பு நலிவு நோய்' என்றொரு பெயரும் உண்டு.

### காரணங்கள் என்னென்ன?

எலும்பு வலிமையை இழப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முதுமை ஒரு முக்கியக் காரணம். முதுமையில் ஆண், பெண் இருபாலருக்கும் இது வருகிறது. ஆண்களுக்கு டெஸ்டோஸ்டீரான் ஹார்மோன் குறைவதால் இது ஏற்படுகிறது. பெண்களுக்கு மாதவிலக்கு நின்றதும் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் சுரப்பது குறைந்துவிடுவதால்இவர்களுக்குஎலும்புவலுவிழந்து 'எலும்பு வலுவிழப்பு நோய்' வந்துவிடுகிறது. அடுத்து, புகைபிடித்தல், மது அருந்துதல், போதைப்பழக்கம், உடல் பருமன், தைராய்டு பிரச்சினை போன்ற பலதரப்பட்ட காரணிகளால் இந்த நோய் ஏற்படுகிறது.

குடும்பத்தில்யாருக்காவது இந்த நோய் இருந்தால், வம்சாவளியாகவும்அக்குடும்பத்தில்பிறந்தவர்களுக்கு இது வரலாம். வறுமை, பசியின்மை, வயிற்றில் அறுவைச் சிகிச்சை போன்றவற்றின் காரணமாக தேவையான ஊட்டச் சத்துள்ள உணவுகளை நெடுங்காலம் சாப்பிடாதவர்களுக்கு கால்சியம் மற்றும் விற்றமின் -'டி' குறைபாடு ஏற்படும். இந்த இரண்டு ஊட்டச்சத்துகளும் எலும்பின் வலிமைக்கும் திண்மைக்கும் அடிப்படையானவை. எனவே, இந்தச் சத்துகள் குறையும்போது இவர்களுக்குக் காலப்போக்கில் 'எலும்பு வலுவிழப்பு நோய்' வருவதுண்டு.

இதுபோல், உடற்பயிற்சி இல்லாதவர்களுக்கும், உடலுழைப்பு குறைந்தவர்களுக்கும் வலிப்பு நோய்க்கான மாத்திரைகள் மற்றும் ஸ்டீராய்டு மருந்துகளைத் தொடர்ந்து பல வருடங்களுக்கு எடுத்துக்கொள்பவர்களுக்கும் இந்த நோய் வருவதுண்டு. ஒல்லியாக உள்ளவர்களுக்கு ஏற்கெனவே எலும்புகள் வலுவிழந்து இருக்கும் என்பதால், முதுமையில் இவர்களுக்கு 'எலும்பு வலுவிழப்பு நோய்' விரைவில் வந்துவிடும். அட்ரீனல் ஹார்மோன் மற்றும் பாராதைராய்டு ஹார்மோன்களின் அதீத செயல்பாடு காரணமாகவும் சிலருக்கு இந்த நோய் ஏற்படுவதுண்டு.

### என்னென்ன தொல்லைகள்?

பெரும்பாலும் இந்த நோய் இருப்பது நோயாளிக்கே தெரியாது. இந்த நோய் பல ஆண்டுகளாக உடலுக்குள்ளேயே மறைந்திருந்து, இறுதியில் எலும்பு முறிவு ஏற்படும்போதுதான் இந்த நோயின் விளைவாகவே எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும். கீழே விழாமல், உடலில் எவ்வித அடியும் படாமல் எலும்பு முறிவு ஏற்படுவதுதான் இந்த நோயின் தனிச் சிறப்பு. இடுப்பெலும்பு, முதுகெலும்பு, மணிக்கட்டு ஆகியவற்றில்தான் எலும்பு முறிவு அதிகமாக ஏற்படும்.


### நோயைக் கண்டறிவது எப்படி?

முன்பெல்லாம் எலும்புகளை எக்ஸ்-ரே படமெடுத்துப் பார்த்து இந்த நோய் இருப்பதைக்



கணிப்பதுதான் வழக்கத்தில் இருந்தது. பொதுவாக 50 சதவீதம் எலும்பு வலுவிழந்தால்தான் எக்ஸ்-ரேக்களில் இந்த நோய் தெரியும். ஆனால், அதற்குள் பலருக்கும் எலும்பு முறிவு ஏற்பட்டுவிடும் என்பதால் இந்தப் பரிசோதனையைக் கொண்டு நோயை ஆரம்பநிலையில் கண்டுபிடிக்க முடியாத நிலைமை நீடித்தது.

இப்போது 'டெக்சா ஸ்கேன்' (Dexa Scan)




எனும் பரிசோதனை வந்துள்ளது. இதுதான் எக்ஸ்-ரே பரிசோதனையைவிடச் சிறந்தது. நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவரைச் சந்தித்து இந்தப் பரிசோதனையைச் செய்துகொள்ளவேண்டும். இதுஎலும்பின்அடர்த்தியை ' அதாவது திண்ம அளவை - (Bone Mineral Density – BMD) அளக்கும் பரிசோதனை. எலும்பு முறிவு ஏற்படுவதற்கு முன்பாகவே எலும்பின் திண்ம அளவைச் சொல்லிவிடும். அதை 'டி ஸ்கோர்' (T Score) என்று சொல்கிறார்கள்.

இந்த அளவு பிளஸ் 1 எஸ்டிக்கும், மைனஸ் 1 எஸ்டிக்கும் இடையில் இருந்தால் அது இயல்பு அளவு. பிளஸ் 1 எஸ்டிக்கு மேல் இருந்தால் மிக நல்லது. இந்த அளவு மைனஸ் 1 முதல் மைனஸ் 2.5

தொடர்ச்சி 5 ம் பக்கம்.......

# 50 வயதுக்கு மேல் எலும்புகள் பத்திரம்

எஸ்டிக்கும் இடைப்பட்டதாக இருந்தால் அது எலும்புத் திண்மக் குறைவு நோயைக் குறிக்கும். மைனஸ் 2.5 எஸ்டிக்கும் கீழ் இருந்தால் அது எலும்பு வலுவிழப்பு நோயைக் குறிக்கும்.

இந்த அளவுகளை வைத்து ஒருவருக்கு எதிர்காலத்தில் எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்புள்ளதா என்பதையும் அனுமானித்துவிடலாம். எலும்பின் திண்ம அளவைத் தெரிந்துகொண்டு சிகிச்சையை மேற்கொள்கிறவர்களுக்கு அது பலன் தருகிறதா என்பதையும் தெரிந்துகொள்ளலாம். ஆனால், இதற்கு ஆகும் செலவு சிறிது அதிகம் என்பதால் அனைவராலும் இந்தப் பரிசோதனையைச் செய்துகொள்ள முடியாது. குருதியில் கால்சியம் மற்றும் விற்றமின் ’-டி’ அளவுகளைத் தெரிந்துகொண்டும் இந்த நோயை ஓரளவுக்கு அனுமானிக்கலாம்.

## யாருக்கு வாய்ப்பு அதிகம்?

உலக அளவில் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் மூன்றில் ஒருவர் என்ற அளவிலும் ஆண்களில் எட்டில் ஒருவர் என்ற அளவிலும் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது. எனவே, இந்த நோயை தொடத்திலேயே கண்டறிவதற்காக சர்வதேச ஆஸ்டியோபோரோசிஸ் நிறுவனம் ஒரு குறிப்பைத் தந்துள்ளது. அதற்கு ‘எலும்பு வலுவிழப்பு நோய்’ வரும் வாய்ப்புள்ளவர்களைக் கண்டறியும் ஒரு நிமிடச் சோதனை? (One minute osteoporosis risk test) என்று பெயர்.

கீழே தரப்பட்டுள்ள கேள்விகளைப் படியுங்கள். இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளுக்கு ‘ஆம்’ என்று பதில் கூறினால் உங்களுக்கு எலும்பு வலிமை இழக்க வாய்ப்புகள் அதிகம் என்று பொருள். அப்படியானால் உடனே மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறுங்கள்.

» **உங்களின் பெற்றோரில் அல்லது குடும்பத்தில் யாருக்காவது லேசாக தடுக்கி விழுந்து அல்லது லேசாக அடிபட்டதும் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறதா?**

» **லேசாக தடுக்கி விழுந்து அல்லது லேசாக அடிபட்டதும் உங்களுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறதா?**

» **உங்களுக்கு 45 வயதுக்கு முன்னரே மாதவிலக்கு நின்றுவிட்டதா?**

» **உங்களுக்கு மூன்று செ.மீ.க்கு மேல் உயரம் குறைந்துவிட்டதா?**

» **அதிகமாக மது அருந்தும் பழக்கம் உள்ளதா?**

» **அதிகமாக புகைபிடிக்கும் பழக்கம் உள்ளதா?**

## சிகிச்சை என்ன?

இந்த நோய் ஏற்பட்ட பின்பு இதை முழுமையாகக் குணப்படுத்த முடியாது. அதாவது, வலிமை இழந்த எலும்பை மீண்டும் வலிமை பெறச் செய்ய முடியாது. சிகிச்சையின் மூலம் மற்ற எலும்புகளை வலிமை பெறச் செய்யலாம். அவ்வளவே. இதைத் தடுப்பதற்குத்தான் வழி இருக்கிறது.

முதுமையில் கால்சியம் மற்றும் விற்றமின் ’டி’ சத்துகள் குறைவதால், அவற்றுக்குச் சிகிச்சை தரப்படும். தினமும் ஒருவருக்கு 500 - 1000 மில்லி கிராம் கால்சியம் தேவை. ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்களுக்குக் கால்சியம் தாது மிகமிக அவசியமான ஒரு சத்துப்பொருள். பெண்கள் மாதவிலக்கு ஆகும்போது, கர்ப்பம் அடையும்போது, பிரசவம் ஆகும்போது, தாய்ப்பால் தரும்போது என்று பல காலகட்டங்களில் கால்சியம் அவர்களுக்கு அதிகப்படியாகத் தேவைப்படுகிறது. இதை உணவிலிருந்து பெறுவது மிக நல்லது.

கால்சியம் மிகுந்துள்ள திரவ உணவுகளில் முதலிடம் பிடிப்பது, பால். 100 மி.லி. எருமைப் பாலில் 200 மி.கிராம்; 100 மி.லி. பசும்பாலில் 100 - 150 மி.கிராம் கால்சியம் உள்ளது; திட உணவுகளில் கேழ்வரகு, கொள்ளு, சோயாபீன்ஸ், உளுந்து, மீன், இறால், நண்டு, முட்டை, ஆட்டிறைச்சி, பீட்ரூட், அவரை, துவரை, கீரைகள், பட்டாணி, காலிஃபிளவர், வெங்காயம், வெண்டைக்காய், வெந்தயம், உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, தண்டுக்கீரை, வெள்ளைப்பூண்டு, முள்ளங்கி, எலுமிச்சை, திராட்சை, கொய்யாப்பழம் போன்றவற்றிலும் கால்சியம் உள்ளது. இந்த உணவுகளை அதிகப்படுத்திக்கொண்டால் நமக்குத் தேவையான கால்சியம் கிடைத்துவிடும். அல்லது தினமும் 500 - 1000 மில்லி கிராம் கால்சியம் மாத்திரை ஒன்றைச் சாப்பிடலாம்.

என்னதான் நீங்கள் கால்சியம் மிகுந்துள்ள உணவுகளைத் தேடிப்பிடித்துச் சாப்பிட்டாலும், அந்த கால்சியம் உடலுக்குள் உள்ள எலும்புக்குள் செல்ல வேண்டுமானால், விற்றமின் ’டி’ அவசியம். தினமும் சூரிய ஒளியில் அரை மணி நேரம் இருப்பதன் மூலம் விற்றமின் ’டி’ இயற்கையாகவே கிடைப்பதற்கு வழிசெய்யலாம். அல்லது பால், முட்டை, மீன், ஈரல் போன்ற உணவுகளில் இதைப் பெறலாம். இப்போது விற்றமின் ’-டி’ மாத்திரைகளும் கிடைக்கின்றன.



மருத்துவரின் ஆலோசனைப்படி தினமும் 2000 யூனிட்டுகள் என்ற அளவில் ஒரு மாத்திரையைச் சாப்பிடலாம். அல்லது 60,000 யூனிட்டுகள் என்ற அளவில் வாரத்துக்கு ஒரு மாத்திரையைச் சாப்பிடலாம். சமீபத்தில் இந்த நோய்க்கு ஊசி மருந்துகளும் வந்துள்ளன. மருத்துவரின் ஆலோசனையில் இவற்றையும் பயன்படுத்திப் பலன் அடையலாம்.

சில பெண்களுக்கு ‘ஹார்மோன் மாற்றுச் சிகிச்சை’ (கூிலிஷதுலிஜள யூளஞுீயிழிஉளதுளஜமி வீஜூளஷழிஞுீதீ) தரப்படுவதும் உண்டு. என்றாலும் இதன் பக்க விளைவாகக் கருப்பை வாய்ப் புற்றுநோய் வருவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாக ஓர் எச்சரிக்கைத் தகவலும் வந்துள்ளது. எனவே, இவர்கள் வருடத்துக்கு ஒரு முறை ‘பாப் ஸ்மியர்’ என்ற பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

## தடுப்பது எப்படி?

இளம் வயதிலிருந்தே தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். வேகமாக நடப்பது, ஓடுவது, சைக்கிள் ஓட்டுவது, நீச்சல், கூடைப்பந்து விளையாட்டு, ஸ்கிப்பிங் போன்றவை மிகச் சிறந்த உடற்பயிற்சிகள்.

யோகாசனங்களைச் செய்வதும் நல்லது.

புகைபிடிக்கக் கூடாது.

மது அருந்தக் கூடாது.

கோப்பி, தேநீர் அருந்துவதை அளவாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாளில் 3 கப்புகளுக்கு மேல் இவற்றை அருந்தக் கூடாது.

எல்லாச்சத்துகளும்கலந்த-ஊட்டச்சத்துள்ள-உணவுகளை சிறு வயதிலிருந்தே உட்கொள்ள வேண்டும்.

50 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடலுக்குப் போதுமான அளவு கால்சியம் கிடைக்கவில்லை என்றால், மருத்துவரின்யோசனைப்படி கால்சியம் மாத்திரையை எடுத்துக்கொள்ளலாம்.

ஸ்டீராய்டு மாத்திரைகளைத் தேவையின்றி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

நடக்கும்போது, குளிக்கும்போது, பேருந்தில் ஏறும்போது என இயல்பாக இயங்கும்போது தரையில் வழுக்கி விழாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இம்மாதிரியானதடுப்புமுறைகளைக் கையாண்டு ஒவ்வொருவரும் தங்கள் எலும்புகளை வலுவாக வைத்துக்கொள்வதில் அக்கறைசெலுத்தினால்தான் முதுமையில் ‘எலும்பு வலுவிழப்பு நோய்’ வராமல் தடுத்துக்கொள்ள முடியும்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஆஸ்துமாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் முன்னிலையில் இலங்கை

உலகில் ஆஸ்துமா நோயால் அதிகம்பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளதாக இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் மொத்த சனத் தொகையில் 10 முதல் 15 சதவீதமானவர்கள் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இது சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர்களை பெரும் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, ஆஸ்துமா நோயை உரிய முறையில் கட்டுப்படுத்தப்படாவிட்டால், அது மரணத்திற்குக் கூட வழிவகுக்கும்.

90 சதவீதமான ஆஸ்துமா நோயாளர்களை இலகுவாக மிகவும் குறைந்த செலவில் மருந்துகளால் கட்டுப்படுத்த முடியும் என வைத்தியர் நெரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 500,000 பேர் துரதிர்ஷ்டவசமாக ஆஸ்துமாவால் உயிரிழக்கின்றனர்.

உலக ஆஸ்துமா தினம் மே 7 ஆம் திகதி வருகிறது. அன்று சுவாச நோய் நிபுணர்கள் சங்கம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.(05)

# தீர்வுகள் கிடைப்பது சாத்தியப்படுமா என்பதை விட அதனைச் சாத்தியப்படுத்த வேண்டியவர்கள் நாமே

## ஈ.பி.டி.பி. சிறீரங்கேஸ்வரன் தெரிவிப்பு

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதனூடாகத் தமிழ் மக்களுக்கான அரசியல் உள்ளிட்ட தீர்வுகள் கிடைப்பது சாத்தியப்படுமா என்பதை விட அதனை சாத்தியப்படுத்த வேண்டியவர்களாக இருப்பதே முக்கியமானது என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் அதை சாத்தியப்படுத்துபவராக எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இருப்பார் எனவும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்த சிறீரங்கேஸ்வரனிடம் ஈ.பி.டி.பியின் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கோட்பாடு ரணிலுக்கு ஆதரவு கொடுப்பதனூடாக சாத்தியமாகுமா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்–

இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாட்டை வழிநடத்தக்கூடிய சிறந்த தலைமைத்துவம் தேவைப்படுகின்றது.

இதேவேளை சஜித் பிரேமதாஸ வடக்க கிழக்கில் 1000 விகாரைகளை கொண்டுவருவென் என பகிரங்கமாக கரத்தக் கூறியிருந்தவர்

அதேபோன்று குறைந்த பட்சம் வடக்கு கிழக்கு இணைந்த ஓர் அலகாக இருப்பதை கூட விரும்பாத அல்லது இருக்கக் கூடாது என நீதிமன்று சென்று வடக்கையும் கிழக்கையும் பிரித்தவர்கள் ஜேவிப்பியினர்.

இந்நிலையில் அதற்கு வேறுபட்ட அரசியல் நகர்வை கொண்ட தலைவராக ரணில் விக்கரமசிங்க இருக்கின்றார். இது அனைத்து கட்சியினருக்கும் நன்கு தெரிந்த விடயம்.

அதேநேரம் குறித்த தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படும் வேட்பாளர்களுக்குள் ரணிலே சிறந்த தெரிவாகவும் உள்ளார்.

இதேநேரம் எமது கட்சி மக்கள் நலன்கள் எதிர்காலம் மற்றும் நாட்டின் நலன்களிலிருந்து சிந்தித்தே தீர்மானங்களை எடுத்துவருகின்றது. அந்தவகையில் தற்போதுள்ள அரசியல் சூழலில் ரணிலின் தெரிவே சாத்தியமானதென்று நாம் ஏற்கனவே வெளிப்படையாக தெரிவித்து வருகின்றோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுமார் ரூ. 70 லட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

வெளிநாட்டில் தலைமறைவாக இருந்த போதைப்பொருளை கடத்தும் 'ரதுல் குமார' வின் பிரதான சகாக்களில் ஒருவர் சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான 25 கிலோ கஞ்சாவுடன் களுத்துறை குற்றப்புலனாய்வு பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சா போதைப்பொருள் விநியோகிப்பதாக புலனாய்வுப் பிரிவினருக்குக்கிடைத்த தகவலின் அடிப்படையில் கடுவலை வெலவிட்ட நகரில் மற்றுமொரு நபருக்கு வழங்குவதற்காக வைத்திருந்த 02 கிலோ கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைது செய்யப்பட்ட நபர் தெமட்டகொடை சாமர நிரோஷன் என்ற 47 வயதுடையவராவார்.

மேலும், சந்தேக நபரிடத்தில் மேற்கொண்ட மேலதிக விசாரணையின் போது கடுவலை வெலவிட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்திருந்த 23 கிலோ கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.(05)

# இளவாலை திருமறை கலாமன்ற வெள்ளி விழா இன்று ஞாயிறன்று

இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணிக்கு இளவாலையில் அமைந்துள்ள கலைத்தூது கலைக்களரியில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் செ.பியன்வெனு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி சா.சிவரூபன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வில் மதத்தலைவர்களின் ஆசியுரைகள், வெள்ளி விழா மலர் வெளியீடு, நடனங்கள், நாடகம், நாட்டிய நாடகம், 'பண்டாரவன்னியன்' நாட்டுக்கூத்து உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## மனோவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார் என்று மனோ கணேசன் தெரிவித்தார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் பிரிக்ஸ் அமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உலகின் முக்கிய நாடுகளில் ஒன்றாக இருக்கும் சீனா, பிரிக்ஸ் அமைப்பில் இணைய இலங்கைக்கு உதவ வேண்டும் என்றும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரிக்ஸ் குழுவில் இந்தியா, ரஷ்யா ஆகியவை நல்ல இடத்தில் இருப்பதாகவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து சீன தூதுக்குழுவை நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சந்தித்திருந்தார்.

முன்னதாக, சிறீ லங்கா பொதுஜன பெரமுன (SLPP) மற்றும் தேசிய மக்கள் சக்தி (NPP) போன்ற கட்சிகளின் பிரதிநிதிகளையும் சீன குழுவினர் சந்தித்திருந்தனர்.

## சஹ்றானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில்லை என்று கூறி பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியாது.

ஒரு பயங்கரவாதியை அடையாளம் கண்டு சிறைபிடிக்கும் நடவடிக்கைகளை ஆணைக் குழுக்கள் மூலம் செய்ய முடியாது.

புலனாய்வு சேவைகள் மற்றும் குற்றப் புலனாய்பு அதிகாரிகளுக்கே இதுபோன்ற விடயங்களில் தகுதியும் அனுபவமும் உள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு காரணமானவர்கள் மற்றும் பொறுப்பை தட்டிக்கழித்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு வருடத்திற்குள் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று தான் நம்புகிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களில் 300 பேர் உயிரிழந்தார்கள். 500 பேர் படுகாயமடைந்தார்கள். ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஆனால் இதுவரை உண்மை பகிரங்கப்படுத்தப்படவில்லை. நீதியும் கிடைக்கப் பெறவில்லை.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் நம்பிக்கையில்லை. உண்மையை கண்டறிவதற்காக விசேட பொறிமுறை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

1948ஆம் ஆண்டு 14ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும். முறையான விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பும், சர்வதேச தரப்பினரது கண்காணிப்பும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

உள்ளக விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதொன்றும் புதிதல்ல உதலாகம ஆணைக்குழு விசாரணைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப் பட்டது. நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமாயின் சர்வதேச ஒத்துழைப்புடன் விசேட பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

விசேட பொறிமுறை ஊடான விசாரணைகள் பரந்துப்பட்ட வகையில் காணப்பட வேண்டும். அவ்வாறான நிலையில் கிடைக்கப்பெறும் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபருக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் - என்றார்.

# கம்பஹா லக் சியனே மகா புது வருட கொண்டாட்டம்

கம்பஹாலக்சியனேமகா புதுவருட கொண்டாட்டம் கம்பஹா மாநகர சபை மைதானத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நாள் முழுவதும் நடைபெற உள்ளது.

அன்றைய தினம் திறந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பந்தய சைக்கிள் போட்டியும் நடைபெறவுள்ளது. ரஞ்சன் லங்கா இன்ஸ்டிட்யூட் முன்பாக காலை 6.30 மணிக்கு ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாவும், இரண்டாம் பரிசாக எழுபத்தைந்தாயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக ஐம்பதாயிரம் ரூபாவும், பத்தாம் பரிசு வரை இருபத்தைந்தாயிரம் ரூபாவும் வழங்க ஏற்பாட்டுக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

அழகு ராணி தெரிவு, சிகிதி புது வருட இளவரசர் மற்றும் இளவரசி தெரிவு, மரதன் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல், வழுக்கு மரம், தலையணை சண்டை என பல போட்டிகள் நடக்கும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கருத்தின் பிரகாரம் கம்பஹா பிரதேச செயலகம், கம்பஹா பிரதேச சபை, கம்பஹா பிரதேச அரச நிறுவனங்கள் மற்றும் கம்பஹா தலைமையக பொலிஸார் இதனை ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

அன்றிரவு நாடளாவிய ரீதியில் பிரபல பாடகர்கள் பலர் கலந்து இசை இரவு நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளை நிற மல்லிகையோ...' பாடலுக்கு நடனமாடி அசத்திய யாழ். பல்கலை மாணவி!



(வி.ரி.சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் இயற்றிய 'வெள்ளை நிற மல்லிகையோ...' என்ற முத்தான பாடலுக்கு நடனமாடி அசத்தினார் காரைதீவைச் சேர்ந்த யாழ். பல்கலை மாணவி ஜெயகோபன் தக்ஷாளினி.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் விபுலானந்தர் ஞாபகார்த்த நற்பணி மன்றமும் இணைந்து நடத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவறதின நூற்றாண்டு விழாவின் போது வழங்கிய 'ஈசன் உவக்கும் நின் மலர்கள் மூன்று' நடன நிகழ்வின்போதே இவரது நடனம் அனைவரையும் கவர்ந்தது. பலரது பாராட்டையும் பெற்றது.

இந்த நடனத்திற்கு ஆடல் நெறியாள்கை, நட்டுவாங்கம்: திருமதி.சர்மினிசுதாகரன்,பாடல்:திருமதிஜெயகணேஷ் புவனேஸ்வரி, மிருதங்கம்: பிரமின்சர்மா விக்னேஸ்வரன் ஆகியோர்பக்கபலமாகவிளங்கினர்.

இந்த நிகழ்வு காரைதீவு சுவாமி விபுலானந்த மணிமண்டபத்தில் நடைபெற்றது.(05)



# சிறுவனின் தங்க நகைகள் வைத்தியர் எனக் கூறி குளியாபிட்டியவில் திருட்டு

குளியாபிட்டிய போதனா வைத்தியசாலையில் வியாழக்கிழமை தனது தாயுடன் வைத்தியசாலைக்கு சென்ற சிறுவனின்தங்கநகைகளைவைத்தியர்போல நடித்து ஏமாற்றி திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட தங்க நகைகள் சுமார் 3 லட்சத்து 82 ஆயிரம் ரூபா பெறுமதியுடையவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுக்கனே குபுகொடுவ பிரதேசத்தைச் சேர்ந்த40வயதுடையதாய்சிறுவனின்காலில் ஏற்பட்ட காயத்திற்கு குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்றுள்ளார்.

இதன்போது, தன்னை வைத்தியர் எனக் கூறிய நபரொருவர் சிறுவனுக்கு ஸ்கேன் பரிசோதனை செய்ய வேண்டும் என்று, அவர் அணிந்திருந்த தங்க நகைகளை கழற்றி பையில் போடுமாறு கூறியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த நபர் வைத்தியசாலையில் உள்ள கதிரையில் சிறுவனை அமரச் செய்து தங்க நகைகளுடன் தப்பிச் சென்றுள்ளார் என உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (05)

# கேகாலை வைத்தியசாலையில் சமையல் பொருள்கள் திருட்டு

கேகாலை பொது வைத்தியசாலையின் சமையல்காரர் ஒருவர் 4,002 ரூபா பெறுமதியுடைய சமையல் பொருள்களைத் திருடும்போது வைத்தியசாலையின் அதிகாரிகளால் பிடிபட்டார் எனக் கேகாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருடப்பட்ட சமையல் பொருள்களை கேகாலை பொலிஸாரிடம் ஒப்படைத்த கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் இந்த சம்பவம் தொடர்பில் வியாழக்கிழமை மாலை முறைப்பாடொன்றைப்பதிவுசெய்துள்ளார்.

கேகாலை பொது வைத்தியசாலையின் அதிகாரிகள் வைத்தியசாலையைச் சுற்றி பார்வையிட்டபோது இந்த சமையற்காரர் கையில் ஒரு பையுடன் பிணவறையை நோக்கி ஓடுவதை அவதானித்துள்ளனர் .

இவரை பின் தொடர்ந்த வைத்திய அதிகாரிகள் இவரைப் பிடித்துச் சோதனையிட்ட போது இவரிடமிருந்து பழங்கள், மீன்கள் மற்றும் உருளைக்கிழங்குகள் போன்ற சமையல் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# முறிகண்டி பகுதியில் விபத்து; படைச் சிப்பாய் ஒருவர் சாவு



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இராணுவ வீரர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

மேற்படிசம்பவம்நேற்று (வெள்ளிக் கிழமை) காலை 6 மணியளவில் முறிகண்டிவசந்தநகர் சந்தியின் ஏ - 9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிபயணித்த பார ஊர்தியை, அதே திசையில் பயணித்த இராணுவ கப் வாகனம் முந்திச்செல்ல முற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த கப் வாகனம் திடீரென இயங்காமல் நின்றுள்ளதுடன் எதிரே வந்த வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகி விடும் எனும் அச்சத்தில் விபத்தை தடுக்கும் நோக்குடன் சாரதி பார ஊர்தியை செலுத்த முற்பட்டுள்ளார்.

இந்நிலையில், கப் வாகனத்தில் பாரஊர்தி மோதியதில் அதில் பயணித்த இரண்டு இராணுவ வீரர்கள் வீதியில் விழுந்துள்ளனர்.

இதில் ஒருவர் மேல் பார ஊர்தி ஏறியதில் குறித்த இராணுவ வீரர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின்சடலம்கிளிநொச்சி வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகளின்பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப் படவுள்ளது.சம்பவம்தொடர்பிமாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சவூதி நாட்டுக்கான தூதுவர் மீடியா போரத்தால் கௌரவிப்பு!



(எம். எப். றிபாஸ்)

சவூதி அரேபியாவிற்கான இலங்கையின் புதிய தூதுவராக பதவியேற்கவுள்ளசட்டத்தரணிஅஷ்ஷெய்க். அமீர் அஜ்வாட் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் கொழும்பு இந்தியன் சமர் டிரெஸ்டோரண்டில் இடம்பெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், மூத்த ஊடகவியலாளருமான என்.எம். அமீன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் போரத்தின் செயற்குழு



உறுப்பினர்களானஊடகவியலாளர்கள், ஒலி,ஒளிபரப்பாளர்கள்எனஅனைவரும் கலந்து கொண்டனர்.

மேலும், இந் நிகழ்வில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், குறிப்பாக ஊடகம் மற்றும் கலாசாரம் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இருநாட்டு தொடர்புகளை விஸ்தரிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர் காலத்தில் ஊடக செயற்பாட்டாளர்களுக்கான பல்வேறு நலன் திட்டங்களைமுன்னெடுப்பதுதொடர்பாகவும்தூதுவரிடம்எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன், போரத்தின் செயற்குழு உறுப்பினர்களால்குறித்துக்காட்டப்பட்ட சில சமூக நலன்திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இவ்விடயங்கள் அத்தனையும் உள்வாங்கிய தூதுவர் எதிர்காலத்தில் தன்னால் எமது நாட்டுக்கு ஆற்றவுள்ள பல்வேறு நலன் சார்ந்த விடயங்கள் குறித்து விளக்கிக் கூறியமை சிறப்பம்சமாகும்.

புதிய தூதுவர் எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியளவில் சவூதி அரேபியாவிற்கான இலங்கையின் புதியதூதுவராகபதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜாமியா நளீமியா, பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பட்டம் பெற்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டமாணி மற்றும் சட்ட முதுமாணிப் பட்டங்கள் பெற்று 1997ல் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இலங்கை வெளிவிகார சேவையைப் பெற்று பல்வேறு நாடுகளில் இராஜதந்திரச் சேவைகளில் இனைந்து கொண்டார்.

தற்போது இலங்கை வெளிவிவகார அமைச்சில் மேலதிகச் செயலாளராக விளங்கும் ஓ. எல்.அமீர் அஜ்வத் ஏற்கனவே ஓமான் மற்றும் யெமன் நாடுகளிலும் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றியுள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# சேவை நலன் பாராட்டு விழா



(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனைப் பிராந்தியத்தில் அதிதீவிர போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை கண்காணித்து அவர்களின் சுகாதார மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் பாராட்டிப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

செரி சர்வதேச தொண்டு நிறுவனம் கல்முனைப் பிராந்தியத்தில் அதிதீவிர போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் பொருட்டு கடந்த 6 மாதங்க ளாக பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

கல்முனைபிராந்தியத்தில்உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பொதுச்சுகாதாரதாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், பொதுச்சுகாதார மருத்துவமாதுக்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர்.

குறித்த உத்தியோகத்தர்களை பாராட்டிக் கௌரவிக்கும் பொருட்டு பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டு விழா புதன்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.றிஸ்பின் அவர்களினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில்பிராந்தியதிட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சி.எம்.மாஹிர், பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சி.எம்.பசால், கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, காரைதீவு, நாவிதன்வெளி, நிந்தவூர் ஆகியசுகாதாரவைத்தியஅதிகாரிகள், சிஎன்ஆர்ஜ நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேற்குறித்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமையாற்றும் பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவமாதுக்கள், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் இதன் போது பாராட்டி பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பெண்களுக்கான நலன் கிளினிக்கில் மிகத் திறமையாக செயற்பட்டு முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்ட நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் இந்நிகழ்வின்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனைப் பிராந்தியத்தில் அதிதீவிர போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் சுகாதார நலன் கருதி பல்வேறு கிளினிக், போஷாக்கு உணவுப் பொருள்கள் வழங்கல் மற்றும் உதவித் தொகைகளையும் வழங்கி சிஃஆர்ஜ சர்வதேச தொண்டு நிறுவனம் பெரும் பணியாற்றியுள்ளது.

2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 325 ஆகக்காணப்பட்ட அதிதீவிர போசாக்கு குறைபாடு உள்ளபிள்ளைகளின்எண்ணிக்கை தற்போது129 ஆக குறைந்துள்ளது. (05)



# முகமாலையில் மனித எச்சங்கள் மீட்பு கிளி. நீதிவான் நேரில் சென்று ஆய்வு



கிளிநொச்சி முகமாலைப்பகுதியில் கண்ணிவெடி அகற்றலின் போது மனித எச்சங்கள் மீட்பு சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் இஸ்மாத் ஜெமில் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டார்.

கிளிநொச்சி பளைப்பொலிஸ் பிரிவுக்குற்பட்ட முகமாலைப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை கண்ணிவெடிஅகற்றலின்போதுமனிதஎச்சங்களுடன் கூடிய ஆடை ஒன்றும் இனங்காணப்பட்டதையடுத்து



பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் மாவட்ட நீதிமன்ற நீதிவானின் கவனத்திற்கு கொண்டு சென்றதைத்தொடர்ந்து. கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமில் இன்று 27.04.2024காலை சம்பவ இடத்திற்கு வருகை தந்து குறித்த மனித எச்சம் மற்றும் மனித எச்ச இனங்காணப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்.

தொடர்ந்து குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் மூலம் குறித்த பகுதியை கண்ணிவெடிஅகற்றும்பணியைமுன்னெடுக்குமாறும் கிடைக்கப்பெறுகின்ற எச்சங்கள் மற்றும் தடயங்கள் தொடர்பாகபளைபொலிஸ்நிலையபொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவருமாறும் தற்போது கிடைக்கப்பெற்ற மனித எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரி மூலம் பரிசோதனைக்கு உட்படுத்த அனுப்பி வைக்குமாறும் எதிர்வரும் திங்கட்கிழமை சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிடுவதாகவும் நீதிவான் தெரிவித்தார். (05 - 113)

# வெப்ப சமநிலையை ஏற்படுத்த கண்டல் தாவரங்கள் நடுகை

## கிண்ணியாவில் புதிய முயற்சி





(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட உப்பாரு பைசல் நகர் போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளடக்கியதாக அர் ரெளலாஇளைஞர்கழகத்தின்ஏற்பாட்டில் எச்எச்பிசி மற்றும் பிரைன் டினா நிறுவனத்தின்அனுசரணை உடன் கண்டல் தாவரங்கள் நடும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலாளர் ஆர்.முஹம்மது கனி தலைமையில் இடம்பெற்றது.

அதிகரித்துவருகின்ற உலக வெப்ப நிலைக்கு வெப்பச் சமநிலையை ஏற்படுத்துவதற்காகவும் குறித்த பகுதிகளில் சுற்றுச்சூழலை அழகு படுத்துவதற்காகவும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகளைக் கவரக்கூடிய வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கிண்ணியா நகர சபையின் செயலாளர் எம் அனிஷ்,

கிண்ணியாபிரதேசசெயலகத்தின் உள்ளக கணக்காய்வு அபிவிருத்தி உத்தியோகத்தர், கிண்ணியா பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்தர் கிண்ணியா பிரதேசத்திற்கான இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் உட்பட அர் ரெளலா இளைஞர் கழக உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (05)

# ஜனாதிபதியின் காஸா சிறுவர் நிதியத்திற்கு 50 லட்சம் நிதி ஜனாதிபதியிடம் கையளிப்பு

## கல்முனை பிராந்திய பொது நிறுவனங்களிடமிருந்து




(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யோசனையின் பேரில் காஸா பகுதியில் இடம்பெற்ற மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு கல்முனை வலயக்கல்வி அலுவலகம், கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல் மற்றும் ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டஷன் ஆகிய பொதுநிறுவனங்களால் 50 லட்சம் ரூபா நிதி நன்கொடையாக நேற்று (வெள்ளிக்கிழமை) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிதி கையளிக்கும் நிகழ்வில் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜீர அபேவர்த்தன உட்பட அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

காஸா சிறுவர்களின் நல திட்டத்திற்காக கல்முனை கல்வி வலய உத்தியோகத்தர்கள், அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் பங்களிப்பில் 3,128,500/- நிதியும், கல்முனை ஓஹுதா ஜும்மா பள்ளிவாசல் சார்பில் நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் தனவந்தர்களின் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற 1,589,000/- நிதியும், ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டஷன் சார்பில் 300,000/- ரூபா நிதியுமாக ஐந்து மில்லியன் ரூபா பணத்தை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர்.

ஸ்போர்ட்ஸ் பெர்ஸ்ட் பௌண்டஷன் சார்பில் நிதியை பௌண்டஷனின் தவிசாளர் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களும், கல்முனை கல்வி வலய நிதியை பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையிலான பிரதிக் கல்வி பணிப்பாளர் எம்.எச். ஜாபீர், கணக்காளர் வை. ஹபீபுல்லா, அதிபர், ஆசிரியர் சார்பில் நவாஸ் சௌபி அடங்கிய குழுவும், கல்முனை ஓஹுதா ஜும்மா பள்ளிவாசல் சார்பில் பள்ளிவாசல் தலைவர் ஏ.எம். இப்ராஹிம் மற்றும் நிர்வாகிகளும் கையளித்தனர்.

(05)

# மந்தபோசனை ஊட்டச் சத்து பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட அரச அதிகாரிகளுக்கான மந்த போசனை தொடர்பான விழிப்புணர்வு தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று(வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

குறித்த நிகழ்வானது ஊட்டச்சத்து மக்கள் மன்றத்தை உயர்த்துங்கள் நிதி பங்களிப்பிலும் சக்தி மகளிர் அமைப்பின் மூலமாக இடம் பெற்றது.

மந்தபோசனே, உணவு பழக்க வழக்கங்கள், கர்ப்பிணி தாய்மார்களின் ஆரோக்கியமான நிலை உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது விழிப்புணர் வூட்டப்பட்டது. குறித்த நிகழ்வுக்கு வளவாளராக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தாய் சேய் நல மருத்துவ அதிகாரி வைத்தியர் ஏ.எச்.சமீம் கலந்து கொண்டார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப்,தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மலர்விழி உட்பட பொது சுகாதார மருத்துவ மாதுக்கள்,பொதுச் சுகாதார பரிசோதகர்கள்,கல்வி அதிகாரிகள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(05)



# திடீரென தற்காலிகமாக மூடப்பட்டது கொக்குவில் தொடருந்து நிலையம்

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் யாழ்ப்பாணம் கொக்குவில் தொடருந்து நிலையம் மூடப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் வியாழக்கிழமை மேற்கொண்டனர்.

காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் தொடருந்துகள் கொக்குவில் தொடருந்து நிலையத்தை அடைந்து மீண்டும் புறப்படுகின்றன. இருப்பினும் குறித்த தொடருந்து நிலையத்தில் வழமையான செயற்பாடுகள் எதையும் மேற்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

மேலும் இத் தொடருந்து நிலைய பொறுப்பதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என தொடருந்து பணிமனையிலிருந்து எமக்கு கிடைத்த தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

குறித்த தொடருந்து நிலையில் இடம்பெற்ற சுமார் 20 லட்சம் ரூபா கையாடல் தொடர்பாகவே இப் பணி இடைநிறுத்தம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. தொடருந்து நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால் பிரயாணப் பயணச்சீட்டுக்களை பெற யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்துக்கு செல்லவும் என்ற அறிவிப்பொன்றும் கொக்குவில் தொடருந்து நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பெருநாள் மற்றும் புத்தாண்டு நிகழ்வுகள் இன்று புத்தளத்தில்

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் மோட்டார் குரோஸ் ரேசிங் கிளப் நோன்பு பெருநாள் மற்றும் தமிழ் சிங்கள புது வருடத்தையொட்டி நடத்த இருக்கின்ற மாபெரும் பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள் இன்று (சனிக்கிழமை) காலை 10 மணியிலிருந்து புத்தளம் இஜ்திமா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற இருக்கின்றது.

சிறுவர் சிறுமிகளுக்கான நெடுவோட்டம், சைக்கிள் ஓட்டம், ஆள் தூக்கி ஓட்டம், வயோதிபர்கள் மற்றும் வாலிபர்களுக்கான நெடுஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டம், அரைக்கரத்தை மற்றும் ரேஸ் கரத்தை ஓட்டங்கள், குதிரை ஓட்டம், இலங்கையின் பிரபலமான தேசிய மட்ட வீரர்கள் பங்கேற்கின்ற மோட்டார் குரோஸ் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

அனைவரையும் இதனை கண்டு களிக்க வருகை தருமாறு அன்போடு அழைப்பு விடுக்கின்றார்கள் ஏற்பாட்டுக் குழுவினர்.(05)

# திருகோணமலை கோட்டக் கல்வி பணிப்பாளராக சண்முகநாயகம்

## ஒஹியவில் சம்பவம்



(வி.ரி.சகாதேவராஜா)

திருகோணமலை வலயத்தின் திருகோணமலை கோட்டக்கல்வி பணிப்பாளராக செந்தில்வடிவேல் சண்முகநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை இந்து கல்லூரியில் பிரதி அதிபராக இருந்த இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தரத்தைச் சேர்ந்த சண்முகநாயகம் புதன்கிழமை முதல் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி அவருக்கான நியமனக்கடிதத்தை கையளித்தார் .

36 வருட கல்வி சேவை அனுபவத்தைக் கொண்ட சண்முகநாயகம் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் திருகோணமலை இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நீண்ட கால சேவையை ஆற்றியவராவார்.

எதிர்வரும் 2025 மார்ச் மாதத்தில் ஓய்வு பெறும் அவர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையின் 1991ஃ92 விஞ்ஞானத்துறையில் பயிற்சி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# கல்விச் சாதனையாளர்கள் காரைதீவில் கௌரவிப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவில் நடப்பாண்டின் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

காரைதீவு விளையாட்டு கழகத்தின் 41 ஆவது வருட சித்திரை புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது குறித்த சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். கழகத் தலைவர் சான்றோரால் பாராட்டப்பட்டார்கள்.

பிரதம அதிதியான விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன்

ஏனைய அதிதிகளான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவு பிரதேச செயலாளர்

சிவ.ஜெகராஜன் முன்னாள் தவிசாளர்



வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் க.பொ.த. சாதாரண தரத்தில் 9ஏ பெற்ற மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3ஏ சித்தி பெற்ற மாணவர்கள் 29 பேர் பெற்றோர்கள் முன்னிலையில் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் கழகபோசகர்களான வே.இராஜேந்திரன், வே.த.சகாதேவராஜா உள்ளிட்ட அதிதிகளும் கலந்துகொண்டு கௌரவித்தனர்.(05)

# குரங்குகளின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த கருவி அறிமுகம்

குரங்குகளின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வளையம் வடிவிலான புதிய கருப்பை கருவியை பேராதனை பல்கலைக்கழகத்தில் உள்ள கால்நடை மருத்துவ பீடம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த கருவி பெண் குரங்களின் கருப்பையில் பொருத்தப்பட்டால் கருவுறுவது தடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

கருவியை ஒருமுறை குட்டி ஈன்ற ஒன்றரை வயது பெண் குரங்கிற்கு சோதனைக்காக பயன்படுத்தப்பட்டது.

சோதனையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கதிரியக்க பரிசோதனையில், கருப்பையில் பொருத்தப்பட்ட கருவி வெற்றிகரமாக செயற்பட்டுள்ளதை அவதானித்ததாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பேராசிரியர் அசோக தங்கொல்ல தெரிவித்தார்.

பெண்களுக்கு கர்ப்பம் தரிப்பதைத் தடுக்கும் நடைமுறையிலுள்ள சாதாரண அளவிலான கருவியைப் பயன்படுத்திய போது அது தோல்வி அடைந்தது. அதனால் சிறிய அளவிலான வளையத்தை உருவாக்க முடிவு செய்தோம் எனத் தெரிவித்துள்ளார்.

பேராதனை போதனா வைத்தியசாலையின் மகப்பேறு மற்றும் நரம்பியல் திணைக்களத்தின் வைத்தியர்களும் பேராதனையிலுள்ள பல்வைத்திய பீடத்தினரும் இந்த முயற்சிக்கு தமது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

’இந்தக் கருவியைப் பொறுத்த விலங்கை அமைதிப்படுத்த அரை மணி நேரம் எடுக்கும், அதைத் தொடர்ந்து அறுவை சிகிச்சைக்கு மற்றொரு அரை மணி நேரம் எடுக்கும். இந்த முறை நாட்டில் குரங்குகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. - எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வளையம் வடிவிலான புதிய கருப்பை கருவியை உற்பத்தி செய்ய 2000 ரூபா செலவாகும் எனத்; தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தால் நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

பல்கலைக்கழகத்தை சமூகத்துடன் இணைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் பல்கலைக்கழகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக பொதுநூலகங்களை வலுவூட்டல் திட்டமானது பல்கலைக்கழக நூலகர் எம்.எம். றிபாயுத்தீன் அவர்களின் ஆலோசனையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படுகின்து. இதற்காக தென்கிழக்குப்பிராந்திய நூலக தகவல் வலையமைப்பானது பெரும் பங்காற்றி வருகின்றது.

இந்த வகையில் உலகப் புத்தக தினத்தை கொண்டாடும் முகமாக தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் தெரிவு செய்யப்பட்ட 08 நூலகங்களுக்கு சுமார் 733 புத்தகங்களை வழங்கி சிறப்பித்தது. இதற்கான நூல்களை ஆஸ்திரேலியாவிலுள்ள வைஎம் றஸ்ட் நிறுவனத்தினர் வழங்கியிருந்தனர்.

இதுவரை இந்நிறுவனம் சுமார் 6341 புத்தகங்களை 04 கட்டங்களாக வழங்கியுள்ளது. அனைத்து நூல்களும் இப்பிரதேசத்திலுள்ள 25 பொதுநூலகங்களுக்கும் 55 பாடசாலை நூலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்நூல்களின் மொத்தப்பெறுமானம் சுமார் 08 மில்லியன் ரூபாக்கள் ஆகுமென சிரேஷ்ட உதவி நூலகரும் வெளிக்கழப்பயிற்சி இணைப்பாளருமான எம்.சி.எம்.அஸ்வர் தெரிவித்தார். இந்நிகழ்வில் பின்வரும் நூலகங்கள் நூல்களைப் பெற்றுக் கொண்டன.

நிந்தவூர் பொது நூலகம், சாய்ந்தமருது பொது நூலகம், வாசிப்பு நிலையம் வீரமுனை, பொது நூலகம் - ஒலுவில், அல்ஹம்றா வித்தியாலயம் - ஒலுவில், சம்மாந்துறை அமிர்அலி வித்தியாலயம்,

மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை, அட்டாளைச்சேனை பொதுநூலகம்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், பிரயோக விஞ்ஞான பீடத்தில் பீடாதிபதி கலாநிதி எச்.எம். ஹாறுன், நூலகர் எம்.எம். றிபாயுத்தீன், பதிவாளர், நிதியாளர் உட்பட பல முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(05)

# சித்திரைத் திருநாள் பெருவிழா சிட்னியில்

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு ஆஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் நடத்தும் சித்திரைத்திருநாள் பெருவிழா நாளை (ஞாயிற்றுக்கிழமை) சிட்னி லிட்டன் ஸ்ட்ரீட் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு பெருமக்கள் அனைவரும் கலந்து கொள்கின்றார்கள்.

அந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெற இருக்கின்றனஎனஅதன்செயலாளர்திருச்செல்வம் லாவண்ணயன் தெரிவித்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.04.2024இல் வெளியிடப்பெற்றது